# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 087/2017

ஆணை எண். 72/2017

நாள் : 24/04/2017

திரு. எஸ். மரிய மைக்கில்,
திருச்சி – 620 007.

– முறையீட்டு மனுதாரர்

மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி
மற்றும் பிற அலுவலர்கள். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குண்டூர் பாலன் நகர், எம்.ஐ.இடி. 4/379 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. மரிய மைக்கில் அவர்களது 05.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2017 அன்று பெறப்பட்டு 87/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு மீது கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குண்டூர் பாலன் நகர், எம்.ஐ.இடி. 4/379 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. மரிய மைக்கில் அவர்கள் "SEBCO Property" என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர், திருச்சிராப்பள்ளி மாவட்டம், குண்டூர் மற்றும் கொட்டப்பட்டு கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள், நீர் நிலைகளை ஆக்கிரமித்தும், கிரயம் பெற்றும் வீட்டுமனைகளாக மாற்றி வருகின்றனர் என்றும் அந்நிறுவனத்தினர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அலுவலர்கள், மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனுதாரர் முறையிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரர்களான மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரமைப்பு உதவி இயக்குநர்கள், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2(11)–ன் கீழ் பொதுப்பணியாளர் என வரையறுக்கப்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க இயலாது எனத் தெரிவித்து, முறையீட்டு மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக [illegible]ன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/4/17

செயலாளர்.

25.4.17

25/4/17

பெறுநர்

திரு. எஸ். மரிய மைக்கில்,
எண்.4/379, அய்யனார் கோவில் எதிர்புறம்,
பாலன் நகர், எம்.ஐ.இ.டி.,
குண்டூர், திருச்சி – 620 007.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்